DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**STC. No. 72/2021**

**Deposition of LW1 examined as PW1** (Complainant) Dt. 03.07.2025

| | |
|---|---|
| Name | மகேந்திரன் |
| Father's/Husband's Name | சாமிநாதன் |
| Village | சருக்கை, குத்தாலம் தாலுக்கா |
| Taluk | |
| Age | 50/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.07.2025

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டூவீலர் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். எனது மகள் மௌசிகாவை சருக்கை மேலத்தெருவில் உள்ள எனது அம்மா வீட்டில் விட்டிருந்தேன். அவரை அழைப்பதற்காக 25.11.2019 ம் தேதி காலை சுமார் 6.00 மணிக்கு சென்ற போது ஆ ஜர் எதிரி மணிசேகரன் என்னை தடுத்து குச்சிக்காரி மகனே என்று திட்டினார். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் வாய் தகராறு நடந்தது. ஆஜர் 2ம் எதிரி எனது சட்டை காலரை பிடித்து பின்பக்கமாக இழுத்து அவரது வீட்டுக்குள் சென்ற போது மணிசேகரன் என்னை கட்டையால் தாக்கியதில் எனக்கு இடது கண்புறுவத்தில் காயம் ஏற்பட்டது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் விலக்க வந்த போது 2ம் எதிரி மிளகாய் தூளை எடுத்து தலையில் கொட்டிவிட்டு ஓடிவிட்டார். அங்கிருந்து வந்து காவல்நிலையத்திற்கு சென்று தகவல் தெரிவித்துவிட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் வாக்குமூலத்திலோ, போலீசார் விசாரணையிலோ எதிரி மணி சேகரன் என்னை தடுத்தார் என்று குறிப்பிட்டு கூறி உள்ளேனா என்றால் *கூறி உள்ளேன். மணி சேகரன் மனைவி இரண்டாவது எதிரி எனது சட்டை* காலரை பிடித்து இழுத்துச் சென்ற விவரத்தை புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி

ஏ. மகேந்திரன்

3.7.25

உள்ளேன். இரண்டாம் எதிரி மிளகாய் பொடி தூவியதாக புகார் வாக்குமூலத்திலோ, போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன். சம்பவம் நடந்த உடன் காவல் நிலையம் சென்றதாக முதலில் விசாரணையில் தெரிவித்துள்ளீர்கள் அங்கு சென்று புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை மருத்துவமனைக்கு செல்ல அறிவுறுத்தினார்கள். காவல் நிலையத்தில் மருத்துவமனை சென்று சிகிச்சை எடுப்பதற்காக மெமோ கொடுத்தார்களா என்றால் இல்லை. காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று போலீசார் கேட்டார்களா என்றால் கேட்டார்கள். நான் விவரம் சொன்னேன். அவர்கள் எழுதிக் கொண்டார்களா என்றால் தெரியவில்லை ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்கள். மேற்கண்ட விஷயங்கள் காவல் நிலையத்தில் நடந்தது என்றால் சரியல்ல அரசு மருத்துவமனையில் நடந்தது. நான் எதிரிகளை தாக்கி அவர்களுக்கு காயம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் எனக்கு எதிராக பாலையூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மணி சேகரனுக்கு முகத்தில் காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சிகிச்சை பெற்றார். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது இந்த பொய் புகாரை கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த எதிரிகளை நான் தான் சென்று தாக்கி காயம் ஏற்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் சத்தம் போடவே அக்கம் பக்கத்தினர் வரவும் அங்கிருந்து தப்பித்து ஓடும்போது தவறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகளை தாக்கிய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக இந்த பொய் புகாரை கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. முன் விசாரணையில் சொன்னது போல் எதிரி எவ்வித கொச்சை வார்த்தைகளாலும் திட்டவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல. 1 வது எதிரி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் இடப் பிரச்சினை உள்ளது என்றால் சரியல்ல. எனது புகார் வாக்குமூலத்திலோ போலீசார் விசாரணையிலோ எனக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சினை இருந்தது என குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சொல்வது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல எதிரிகளுக்கும் இந்த வழக்கறிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

எ. லோகநாதன்

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

M. [signature] 3.7.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை